Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் வியாழக்கிழமை, செப்டம்பர் 09, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 57

# தமிழ்நாட்டில் கடலில் காற்றாலை மின்சார நிலையங்கள்

## டென்மார்க் மின்சக்தி மந்திரி ஜானிக் ஜோர்சென்சன் தலைமையில் 50 பேர் கொண்ட குழுவுடன்

# முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, செப்டம்பர் 09 2021: காற்றாலை மின் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது.

இந்தியாவில் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் 34 சதவீதம் தமிழகத்தின் பங்காகும். தமிழ்நாட்டில் மேலும் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரை உள்ளது. இங்கு அதிகமாக காற்று வீசுவது வழக்கம். இதை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது தொடர்பாக திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

டென்மார்க் நாட்டில் இதேபோல கடலில் காற்றாலை அமைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். எனவே டென்மார்க்குடன் இது சம்பந்தமாக அணுகப்பட்டது. அவர்கள் தமிழ்நாட்டில் கடலில் காற்றாலை மின்சார நிலையங்களை அமைத்து தர முன் வந்திருப்பதுடன் பெரிய அளவில் முதலீடும் செய்கிறார்கள்.

மன்னார் வளைகுடா பகுதிகளிலும், அங்குள்ள தீவுகளிலும் முதல்கட்டமாக காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் காற்று அதிகம் வீசக்கூடிய கடற்கரைகளை தேர்வு செய்து அங்கும் காற்றாலைகளை அமைக்கிறார்கள்.

டென்மார்க்கில் கடலில் மிதக்கும் காற்றாலைகள் அதிகமாக உருவாக்கப்பட்டுள்ளன.



அதேபோல இங்கும் மிதக்கும் காற்றாலைகளை அமைத்துக் கொடுக்க இருக்கிறது.

இது குறித்து முடிவு செய்வதற்காக டென்மார்க் மின்சக்தி மந்திரி ஜானிக் ஜோர்சென்சன் தலைமையில் 50 பேர் கொண்ட குழு தமிழகம் வந்துள்ளது.

அந்த குழுவினர் நேற்று கலைவாணர் அரங்கில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்து பேசினர். அப்போது தமிழ்நாட்டில் எந்த மாதிரியான காற்றாலைகளை அமைப்பது? எவ்வாறு அவற்றை செயல்படுத்துவது என்பது தொடர்பாக ஆலோசனைகளை நடத்தினார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் டென்மார்க்குடன் கிரீன் மின்சக்தி தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொண்டார். அதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தில் ரூ.35 ஆயிரம் கோடி முதல் ரூ.70 ஆயிரம் கோடி வரை முதலீடு செய்யப்பட உள்ளது. கடலில் அமைக்கப்படும் காற்றாலைகள் மூலம் 4 ஆயிரம் மெகாவாட்டில் இருந்து 10 ஆயிரம் மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க் நாடு ஏற்கனவே தமிழ்நாட்டில் ரூ.5,500 கோடி அளவுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளது. இப்போது கடல் காற்றாலை மின் உற்பத்தியையும் செயல்படுத்த உள்ளது.



சென்னை: அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே. பழனிசாமியை அவரது இல்லத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சி.ஆர்.குணசேகரன் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார். அப்பொழுது செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராசேந்திரன் உடனிருந்தார்.



ஈரோடு: ஈரோட்டில் இருந்து தாராபுரம் வழியாக பழனி செல்லும் புதிய ரயில் பாதை குறித்து மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ரயில்வே அமைச்சருடன் சந்தித்து உரையாடல்.

## திண்டுக்கல் மாவட்டம் ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி

திண்டுக்கல், செப்டம்பர் 09 2021: திண்டுக்கல் மாவட்டம், ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழக அரசால் , செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் திண்டுக்கல் மாவட்டம் , ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது . இக்கண்காட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், முதலமைச்சராக பொறுப்பேற்றபின் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் 5 முக்கிய அரசாணைகளைப் பிறப்பித்தார்கள் . கொரோனா பேரிடர் காலத்தில் தமிழக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கும் , வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் , அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் 4,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது . அதோடு 14 வகையான மளிகைப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது . மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு 3ரூபாய் வீதம் குறைத்து விற்பனை செய்ய முதலமைச்சர் அரசாணை பிறப்பித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பணிபுரியும் மகளிர் , உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும், பயணம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். தேர்தல் பிரச்சாரத்தின்போது, மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்கிற



வாக்குறுதியை அளித்துள்ளார்கள் .

அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு இந்திய ஆட்சிப்பணி நிலை அலுவலர் ஒருவரை நியமிக்கும் அரசாணைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் இன்னலைக் குறைக்கும் வகையில் சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்க மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

மேலும் , திண்டுக்கல் மாவட்டத்தில் , கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப்பணிகள் உள்ளிட்டவைகள் தொடர்பாக புகைப்படங்கள் இடம் பெற்று, பொதுமக்கள் பார்த்து எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது . இப்பகுதியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## திண்டுக்கல் மாவட்டம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் கொரோனா தடுப்பூசி கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.விசாகன் அறிவுறுத்தல்

திண்டுக்கல், செப்டம்பர் 09 2021: திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் 100 சதவீதம் தடுப்பூசி போட மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை, தொழில் துறை அலுவலர்களால் முகாம்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 71,000 தொழிலாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணையின்படி 01.08.2021 முதல் தொழிற்சாலைகளில் தடுப்பூசி செலுத்திய தொழிலாளர்கள் மட்டும் பணிக்கு அமர்த்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் , இது தொடர்பாக குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில், திண்டுக்கல், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், தொழில்துறை உதவி இயக்குநர், வருவாய் அலுவலர் மற்றும் வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் கொண்ட குழுவினால், பழனி பகுதியில் உள்ள செங்கல் சூலைகள் மற்றும் பிற தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு தடுப்பூசி செலுத்தாத தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தியதற்கும், முகக்கவசம் அணியாமலும், கிருமி நாசினி பயன்படுத்தாமலும், தொழிற்சாலை நிர்வாகத்தினர் கொரோனா தடுப்பு செயல்முறை ஆணைகளை மீறியதற்காக தொழிற்சாலை ஒன்றுக்கு ரூ.5,000 வரை 8 தொழிற்சாலைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், ஆய்வின்போது, தடுப்பூசி செலுத்தாமல் பணிபுரிந்த தொழிலாளர்களை உடனடியாக அருகில் உள்ள தடுப்பூசி செலுத்தும் முகாம். அரசு மருத்துவமனைக்கு அனுப்பு தடுப்பூசி செலுத்த வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.



தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முதல் தவணை தடுப்பூசி 100 சதவீதம் செலுத்தப்பட்டது என்றும் , தடுப்பூசி செலுத்தாத தொழிலாளர்களை பணிக்கு அமர்த்த மாட்டோம் என்று சுயஉத்திரவாதமும், தடுப்பூசி செலுத்தாத தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படமாட்டாது என்று அறிவிப்பு பலகை தொழிற்சாலை நுழைவு வாயிலில் மாட்டியதன் விபரத்தினை திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் தெரிவிக்க வேண்டும் .

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.விசாகன் தெரிவித்துள்ளார்கள்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## வருசநாடு ஊராட்சியில் உள்ள தருமராஜபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களின் கால்களை பதம் பார்க்கும் தார்ச்சாலை



**வருஷநாடு, செப்டம்பர் 09 2021: வருசநாடு ஊராட்சியில் உள்ள தருமராஜபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் உட்பட இருபால் ஆசிரியர்கள் மற்றும் ஆறாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் தேவாலயம் கால்நடை மருத்துவமனை செல்லும் மருத்துவர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் சாலை வழியாக விவசாய நிலங்களுக்கு செல்லும் விவசாயிகள் மற்றும் பணியாளர்கள் என அனைவரும் இந்த சாலையை பயன்படுத்தி வருகின்றனர். இந்த சாலை வருஷநாடு மெயின் ரோட்டில் இருந்து பிரியும் ரேஷன் கடையில் இருந்து மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் சாலை ஆகும். இச்சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலை முற்றிலும் பெயர்ந்து குண்டும் குழியுமாக உள்ளது. மாணவர்கள் பெரும்பாலும் மிதிவண்டியில் வருவதால் நிலைதடுமாறி கீழே விழுகின்றன. எனவே ஊராட்சி நிர்வாகம் எதிர்வரும் நிதியில் சாலையை அமைத்துக் கொடுக்க கேட்டுக் கொள்கின்றனர்.**



**நாகர்கோவில்: நாகர்கோவில் மாநகராட்சி நடமாடும் வாகனம் மூலமாக கொரோணா தடுப்பூசி போடும் திட்டத்தின்படி தற்பொழுது வடசேரி பகுதியில் வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகின்றன. இதனை மாநகராட்சி ஆணையர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மேலும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியருக்கும் ரேண்டம் முறையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகை உதவி இயக்குனர் அலுவலகம் சார்பாக ஒன்றிய விவசாய பெருமக்களுக்கு வேப்பம் புண்ணாக்கு 75 கிலோ ஐந்து நபர்களுக்கு இனக்கவர்ச்சி கிருபாதி பூச்சி கொல்லி மருந்துகள். செல்வராஜ், சீனிவாசன், கிஸோர், சின்னசாமி, சுரேஷ் ஆகியோருக்கு தேனி மாவட்ட விவசாய வேளாண்மை இந்திரா காந்தி மற்றும் மணிகண்டன் விவசாய மக்களுக்கு விளக்கம் கொடுத்து வழங்கினார்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேல்மங்கலத்தில் ஊராட்சி தலைவர் நாகராஜ் அவர்களின் தீவிர முயற்சியால் அங்குள்ள பழைய உழவர் சந்தை கூடத்தை மீண்டும் புத்துயிர் பெற்று அச்சந்தை கூடத்தை சுகாதார பணியாளர்களை கொண்டு தூய்மை பணி செய்தனர்.**

## வருஷநாடு பகுதிகளில் வைகையை காக்க தடுப்புச்சுவர் கட்டப்படுமா!

*வருஷநாடு செப்டம்பர் 09 2021:* கடமலை மயிலை ஒன்றியத்தில் வருஷநாடு ஊராட்சியில் சிங்கராஜபுரம் பாலத்திலிருந்து வருஷநாடு சுடுகாடுவரை இடையே இரண்டு பிரிவுகளாக ஆற்றுப்படுகையில் இரண்டு தடுப்புச்சுவர் மற்றும் இரண்டு படித்துறைகள் அமைத்துள்ளது. மீதம் உள்ள சுடுகாடு வரையிலான ஐயப்பன் கோவில் பின்புறம் மற்றும் பள்ளிவாசல் இலிருந்து வருஷநாடு சுடுகாடு வரை என இரண்டு பிரிவாக தடுப்புச் சுவர் கட்டிட அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். தடுப்பு சுவர் இல்லாததால் ஹோட்டல் மற்றும் கோழி கழிவுகளை வைகை ஆற்றுக்குள் கலந்து விடுகின்றனர். இதனால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இப்பகுதியில் உரை அமைக்கப்பட்டு அதிலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதை தடுக்கவும் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீர் ஊருக்குள் புகாமல் இருக்கவும் ஆற்றுப் படுகையில் உள்ள மண் அரிப்பை தடுக்கவும் தனிநபர்களின் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த இந்த தடுப்புச்சுவர் உதவும் என இப்பகுதி பொதுமக்களும் தன்னார்வலர்களும் கூறுகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகமும் பொதுப்பணித் துறையினரும் இணைந்து தடுப்பு சுவர் அமைத்து கொடுக்க கோரிக்கை வைக்கின்றனர். இதே போன்ற நிலை கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கன்னியாகுமரி ஈத்தாமொழி அருகே மது குடித்தபோது ஏற்பட்ட தகராறில் கட்டிட தொழிலாளியை அடித்து கொலை செய்த தம்பியை போலீசார் கைது செய்தனர்

*கன்னியாகுமரி, செப்டம்பர் 09 2021:* கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழி அருகே மது குடித்தபோது ஏற்பட்ட தகராறில் கட்டிட தொழிலாளியை அடித்து கொலை செய்த தம்பியை போலீசார் கைது செய்தனர். மேலும், 3 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



குமரி மாவட்டம் ஈத்தாமொழி அருகே உள்ள புதூர் காலியாயன்விளைய சேர்ந்தவர் திருமலை பெருமாள் என்ற கண்ணன். இவர், அதே பகுதியில் தும்பு ஆலை வைத்து நடத்தி வருகிறார். அவர் நேற்று காலை வழக்கம்போல் ஆலைக்கு வந்தார். அப்போது ஆலையின் வளாகத்துக்குள் ஒரு வாலிபர் காயங்களுடன் பிணமாக கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உடனே, இதுபற்றி ஈத்தாமொழி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

இது பற்றி தகவல் அறிந்ததும் கன்னியாகுமரி போலீஸ் துணை சூப்பிரண்டு ராஜா, ஈத்தாமொழி சப்-இன்ஸ்பெக்டர் பொன்கீதா, சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் விஜயேந்திரன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பிணத்தை பார்வையிட்டனர். அங்கு பிணத்தின் அருகில் ஒரு பெரிய மரக்கட்டை கிடந்தது. நள்ளிரவில் யாரோ அந்த வாலிபரை மரக்கட்டையால் அடித்து கொலை செய்தது தெரிந்தது.

இதையடுத்து மோப்ப நாய் ஏஞ்சல் வரவழைக்கப்பட்டது. மோப்ப நாய் ஏஞ்சல் பிணம் கிடந்த பகுதியில் இருந்து செம்பொன்கரை ஆற்றங்கரை வரை சென்று நின்றது. தடயவியல் நிபுணர் ஜீவானந்தம் அங்கிருந்த கைரேகைகளை சேகரித்தார்.

இது தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில் கொலை செய்யப்பட்ட வாலிபர் நங்கூரான்பிலாவிளையை சேர்ந்த கண்மணி என்பவரது மகன் ஈஸ்வரன் (வயது 30) என்பதும், அவர் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து வந்ததும் தெரியவந்தது.

ஈஸ்வரன் மற்றும் அவருடைய சகோதரர்கள் ராஜேஷ்(27), வினோ(25) மற்றும் ஈஸ்வரனின் நண்பர்களான செம்பொன்கரையை சேர்ந்த ஜெகதீஷ்(28), நாகராஜன்(35) ஆகியோர் சேர்ந்து அங்கு மது குடித்துள்ளனர். அப்போது, ஈஸ்வரனுக்கும் அவருடைய அவருடைய தம்பிக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த ஈஸ்வரனின் தம்பி தனது நண்பர்களுடன் சேர்ந்து சேர்ந்து கொலை செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. கொலையாளிகளை கைது செய்வதற்கு போலீசார் வலைவிரித்து தேடி வருகின்றனர்.

## தமிழக அரசு செய்தியாளர்கள் நலவாரியம் அமைக்கப்படும் என அறிவித்தற்கு ராமநாதபுரம் செய்தியாளர்கள் சங்கம் சார்பில் நன்றி

*ராமநாதபுரம், செப். 09 2021:* தமிழக அரசு செய்தியாளர்கள் நலவாரியம் அமைக்கப்படும் என அறிவித்தற்கு ராமநாதபுரம் செய்தியளர்கள் சங்கம் சார்பில் நன்றி தெரிவித்தனர். ராமநாதபுரம் செய்தியாளர்கள் சங்கம் தலைவர் முருகன், செயலாளர் முருகேசன், மற்றும் நிர்வாகிகள் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியதாவது:

தமிழகத்தில் பணியாற்றும் செய்தியாளர்களின் பாதுகாப்புக்காக நலவாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலியுருத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் செய்தியாளர்களுக்கு நலவாரியம் அமைக்கப்படும். பணி காலத்தின் போது உயிரிழக்கும் போது முதல்மைச்சர் பொது நிவாரண நிதியில் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த ரூ 3 லட்சத்தை, ரூ 5 லட்சமாக உயர்த்தி செய்தித்துறை அமைச்சர் மு.பெ.வெள்ளக்கோயில்



சாமிநாதன் அறிவித்தார். இதற்கு ராமநாதபுரம் செய்தியாளர்கள் சங்கம் வரவேற்று நன்றி தெரிவித்தனர்.

## ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் நான்கு நாட்களுக்கு பின் பக்தர்கள் தரிசனம்

*ராமேசுவரம், செப். 09 2021:* ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய நான்கு நாட்கள் தடை விதிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து அதிகளவில் பக்தர்கள் நீண்ட க்யூ வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் கரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை காரணமாக வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் அமாவாசை ஆகிய நான்கு நாட்கள் பக்தர்கள் தரிசனம் செய்ய தடை விதிக்கப்பட்டது. இதனால் ராமேசுவரம் வருகை தந்த பக்தர்கள் கோயில் முன்பு சூடம் ஏற்றி வழிபட்டு சென்றனர். இந்நிலையில், வழக்கம் போல பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. இதனால்



அதிகாலையில் இருந்து பக்தர்கள் நீண்ட க்யூ வரிசையில் நின்று கோயிலுக்குள் சென்றனர். பக்தர்கள் அனைவருக்கும் உடல் வெப்ட பரிசோதனை செய்ததுடன் கிறுமி நாசினி கைகளை தூய்மை செய்து கொண்டனர். மேலும் முகக்கவசம் அணிந்து வந்த பக்தர்கள் மட்டுமே கோயிலுக்கு தரிசனம் செய்ய சென்றனர்,

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலுக்கு நான்கு நாட்களுக்கு பின் அதிகளவில் பொதுமக்கள் தரிசனம் செய்ய வருகை தந்தனர்.

## தனிஷ்க், சேஃப்கோல்ட் மூலமாகச் செயல்படுத்தப்படும் டிஜிட்டல் தங்கம் அறிமுகம் குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது!

*சென்னை, செப்டம்பர் 09 2021:* இந்தியாவின் மிக நம்பிக்கைக்குரிய, எல்லோராலும் விரும்பப்படும் ஜூவல்லரி பிராண்டாக, டாடா குழுமத்தைச் சேர்ந்த தனிஷ்க், சேஃப்கோல்ட் மூலமாகச் செயல்படுத்தப்படும் டிஜிட்டல் தங்கம் அறிமுகம் குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. டிஜிட்டல் தங்கம் பிரிவில் கால் பதித்துள்ள இந்த பிராண்ட், சேஃப்கோல்ட் உடன் இணைந்து டிஜிட்டல் முறையில் தங்கத்தை விற்கும் முதலாவது ஜூவல்லரி பிராண்ட் எனும் பெருமையைப் பெறுகிறது.

நுகர்வோர் தொடர்பு வளர்ந்துவரும் நிலையில் தொழில்நுட்பத்தை வசதியான ஊடகமாகப் பயன்படுத்தி, மிக விருப்பமான சேமிப்பு முறைகளில் ஒன்றாக தங்கத்தைப் பயன்படுத்தி, 24 காரட் தூய்மையான தங்கத்தில் முதலீடு செய்வதற்கான ஒரு நம்பகமான, வெளிப்படையான முறையாக 'சேஃப்கோல்ட் மூலமாகச் செயல்படுத்தப்படும் தனிஷ்க்கின் 'டிஜிட்டல்



தங்கம்' அமையும்.

ஒரு தடையற்ற அனுபவத்தை வாடிக்கையாளர் பெறும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட, வெளிப்படையான, எஸ்இபிஐ விதிமுறைகளுக்கு இணங்கச் செயல்படும் டிஜிட்டல் கோல்ட் தளமான சேஃப்கோல்ட் உடன் கூட்டுச் செயல்பாட்டை மேற்கொண்டுள்ளது தனிஷ்க். இதில், ரூபாய் 100=க்கும் குறைவான விலையில் வாடிக்கையாளர்கள் தங்களது தங்க சேமிப்பு பயணத்தைத் தொடங்க முடியும். சேஃப்கோல்ட் மூலமாகச் செயல்படுத்தப்படும் தனிஷ்க் டிஜிட்டல் தங்கத்தை மெய்நிகர் முறையில் வாங்கினாலும், வாடிக்கையாளர்களுக்குத் தங்கம் தேவைப்படும் நேரத்தில் நாடு முழுவதுமுள்ள 360 தனிஷ்க் சில்லறை விற்பனையகங்களில் அல்லது தனிஷ்க்கின் அதிகாரப்பூர்வ தளமான www.tanishq.co.in-ல் அவற்றை உண்மையான தங்கமாக மாற்றிக்கொள்ளும் வசதியும் இதில் உண்டு.

சேஃப்கோல்ட் மூலமாகச் செயல்படுத்தப்படும் தனிஷ்க் டிஜிட்டல் தங்கத்தை ஒருமுறை வாடிக்கையாளர் வாங்கிவிட்டால் அதற்கு இணையான தங்கம் உண்மையாகவே வாடிக்கையாளர் பெயரில் 10 ஆண்டு காலத்துக்கு சேமிப்பில் வைக்கப்படும்; இவ்வாறு வைக்கப்படும் தங்கத்திற்கு லாக்-இன் கால வரையறையோ, வாங்கப்படும் தங்கத்தின் அளவில் வரம்போ கிடையாது. வாடிக்கையாளர்கள் தங்களது வீட்டில் பாதுகாப்பாக இருந்தவாறே டிஜிட்டல் தங்கத்தை விற்கும் வசதியும் உண்டு.

## வருஷநாட்டில் மின் கட்டணம் செலுத்த இடம் கிடைக்குமா

*வருஷநாடு, செப்டம்பர் 09 2021:* கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியை மையப்படுத்தி நான்கு ஊராட்சிகளில் 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் உள்ளனர். இப்பகுதியில் மின்சாரம் பயன்படுத்தும் அனைவரும் மின் கட்டணம் செலுத்த 8 கிலோ மீட்டர் தூரம் உள்ள மயிலாடும்பாறை மின்சார அலுவலகத்தை நாடி வருகின்றனர். மின்சார வாரிய அலுவலகத்தில் மதியம் இரண்டு மணிக்குள் சென்றால் மட்டுமே மின் கட்டண தொகை கட்ட நேரிடுகிறது. தனியார் ஆன்லைன் மூலம் கட்டும்பொழுது கமிஷன் என்ற பெயரில் கூடுதல் கட்டணம் செலுத்தும் நிலையில் உள்ளது. அதுவும் குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்ட தவறும் பட்சத்தில் மின்சார வாரியம் விதிக்கும் அபராத தொகையும் சேர்த்து கட்ட வேண்டும். என்ற சூழ்நிலையில் இப்பகுதி மக்கள் உள்ளனர். இதுபோன்ற அனைத்து சிரமங்களையும் போக்க மின்சார வாரியம் மின் கட்டணம் செலுத்த இடம் ஒதுக்கீடு செய்தால் முன் வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. வருசநாடு ஊராட்சியில் தற்போது மக்கள் பயன்பாட்டிற்கு வராத நிலையில் உள்ள அரசு கட்டிடங்களை இது போன்ற மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஊராட்சி நிர்வாகம் தீர்மானம் நிறைவேற்றி இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். நிறைவேற்றி சாதனை படைக்குமா வருஷநாடு ஊராட்சி இதுபோன்ற சவால்கள் நிறைந்த போராட்டத்தில் தற்போது வருஷநாடு ஊராட்சி தத்தளித்து வருகின்றது. என்பது அனைவரும் அறிந்த விஷயமே இடம் கொடுப்பீர் சாதனை செய்வீர் என்ற நம்பிக்கையில் சமூக ஆர்வலர்கள் உள்ளனர்.

## விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகே வீரசோழனில் வ.உ.சிதம்பரனாரின் 150வது-பிறந்தநாள் விழா. தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து வ.உ.சி பேரவை குமரேசன் தலைமையில் தீர்மானம்

*விருதுநகர், செப்டம்பர் 09 2021:* விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகே வ.உ சிதம்பரனார் நினைவுநாள் தியாக திருநாளாக கடைபிடிக்கப்படும் எனவும் ஆண்டுதோறும் வ.உ.சிதம்பரனார் பெயரில் ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசுடன் கப்பலோட்டிய தமிழன் விருது உட்பட 14 முக்கிய அறிவிப்புகளை சட்டசபையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததை தொடர்ந்து விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகே வீரசோழன் கிராமத்தில் வ.உ.சிதம்பரனாரின் 150-வது பிறந்தநாள் விழாவை



முன்னிட்டு வ.உ.சி பேரவையின் தலைவர் குமரேசன் தலைமையில் மந்தையம்மன் கோவிலில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த வ.உ.சிதம்பரனார் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி, இனிப்பு வழங்கி கொண்டாடினர். வ.உ.சி பேரவை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## பெரியகுளத்தில் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க நகர் ஒன்றியம் சார்பாக திருவள்ளுவர் சிலை அருகில் தமிழக முதல்வரின் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

*தேனி, செப்டம்பர் 09 2021:* தேனி மாவட்டம் பெரியகுளம் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் நகர், ஒன்றியம் சார்பாக திருவள்ளுவர் சிலை அருகில் மாபெரும் தமிழக முதல்வரின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. சத்துணவு ஊழியர்களை முழு நேர அரசு ஊழியராக அறிவித்து பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும். ஓய்வு ஊதியமாக ரூ 9000 மும், குடும்ப பாதுகாப்புடன் கூடிய ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் மற்றும் பல கோரிக்கைகளை முன் வைத்து சத்துணவு அங்கன்வாடி பணியாளர்களும் ஓய்வு பெறுவோர் சங்கம் கலந்து



கொண்டனர். இந்நிகழ்வில் கதிரேசன் லட்சுமி தலைமை தாங்கினார். முன்னிலை நகர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ராஜேஷ்கண்ணன், ஜெரால்டு பரமேஸ்வரன், ஈஸ்வரன், தாஜுதீன், சுப்புராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் சத்துணவு ஊழியர் சங்கம் ஜெயபாண்டி சிறப்புரையாற்றி நன்றியுரை கூறினார்.

# கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாட்டில் பயன்பாட்டிற்கு வராத நூலக கட்டிடம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை

**வருஷநாடு செப்டம்பர் 09 2021:** கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் வேணி அம்மன் கோவில் முன்பு 2013, 2014-ஆம் நிதியாண்டில் ரேஷன் கடை வளாகத்தில் இப்பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக நூலகம் கட்டடப்பட்டு திறப்பு விழாவை கண்ட இக்கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வராமல் காட்சிப் பொருளாக மட்டுமே உள்ளது. தற்போது நூலகம் வைகை ஆற்று படுகையில் இருக்கும் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது அப்பகுதியில் பராமரிப்பின்றி பன்றிகள் அதிகம் நடமாடும் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் இருக்கும். கட்டிடத்தில் நடைபெறுவதால் மக்கள் யாரும் சென்று படிப்பதில்லை மற்றும் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை இல்லாமல் பெயரளவில் நடைபெறுகின்றது எப்போது திறக்கப்படுகிறது. என்பது கூட பொதுமக்களுக்கு தெரியவில்லை. எனவே நூலகத்திற்கு என்று கட்டடப்பட்ட இடத்தில் நூலகம் செயல்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க ஊராட்சி நிர்வாகம் தீர்மானம் நிறைவேற்றி கிடைக்க வழிவகை செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென கேட்டுக் கொள்கின்றனர்.



**நாகர்கோவில்: நாகர்கோவில் மாநகராட்சி மாநகராட்சியின் வினோத பணிகளால் மக்கள் பெருமிதம் மாநகராட்சியின் கடமை உணர்ச்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. சாலைகளில் வாகனம் ஓட்டுவதற்கு வாகன ஓட்டிகளுக்கு பெரியவங்க நெருக்கமாக இருந்த சாலையை ஒரு வழிப் பாதையாக மாற்றி வானங்கள் அமைதியாக செல்வதற்கு வழிவகுத்து தந்ததற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் ஊழியர்களுக்கு நாகர்கோவில் மாநகராட்சி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.**



**கன்னியாகுமரி: கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியத்துக்கு உட்பட்ட கண்ணனூர் பஞ்சாயத்து நிர்வாகிகளான யூனியன் கவுன்சிலர் பஞ்சாயத்து தலைவர் துணை தலைவர் நிர்வாகிகள் மற்றும் உள்ளுவெட்டி கப்புவிளை பகுதியை சார்ந்த கான்ட்ராக்டர் அனைவரும் கண்ணனூர் கூட்டுறவு வங்கி முதல் சிஎஸ்ஐ சமூக நல கூடம் வரை சிமெண்ட் சாலை போட்டு முடிக்கபட்டது. இதில் ஒரு கூட்டு காங்கிரீட்டிற்கு ஒரு சட்டி சிமெண்ட் மட்டும் போட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் பாராட்டியுள்ளனர்.**

# பழனியில் பள்ளி மாணவிகளுக்கு மகளிர் காவல்துறை சார்பில் விழிப்புணர்வு



**பழனி, செப்டம்பர் 09 2021: பழனி அருகே உள்ள கீரனூர் பேரூராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழனி நகர அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கவிதா தலைமையில் பள்ளி மாணவிகளுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பெண்கள் செல்போன்களில் பேஸ்புக், வாட்ஸ் அப், போன்ற தளங்களில் தங்களது புகைப்படங்களை பதிவிட கூடாது, நேரடியாக எந்த ஒரு ஆண்களிடமும் லைவ் என்று சொல்லக்கூடிய தளங்களில் பேசக்கூடாது, தங்களது பெயர் மற்றும் முகவரி போன்ற தகவல்களை முன்பின் தெரியாத ஆண்கள் இடம் தரக் கூடாது உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை கருத்துக்களை விழிப்புணர்வாக எடுத்துக் கூறினர். இந்நிகழ்வில் மகளிர் காவல் நிலைய காவலர்களும் பள்ளி தலைமை ஆசிரியரும் ஆசிரியைகளும் மாணவிகளும் திரளாக கலந்து கொண்டனர்.**

# திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மோட்டார் வாகன ஓட்டுனர் பயிற்சி வளாகத்தில் அனைத்து தனியார் பேருந்து பள்ளி வாகனங்களின் ஊழியர்களிடம் விழிப்புணர்வு கூட்டம்

திருவண்ணாமலை, செப்டம்பர் 09 2021: திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மோட்டார் வாகன ஓட்டுனர் பயிற்சி வளாகத்தில் ஆரணி டவுன் மற்றும் சுற்றுவட்டார, அனைத்து தனியார் பேருந்து பள்ளி வாகனங்களின் ஊழியர்களிடம் விழிப்புணர்வு கூட்டம். திருண்ணாமலை மாவட்ட கல்வி அலுவலர் சம்பத் அவர்கள் ஆரணி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கோடீஸ்வரன் அவர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் வெங்கடேசன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் பேருந்து ஊழியர்களுக்கு பள்ளி மாணக்கர்களை சமூக இடைவெளியுடன் பேருந்தில் அழைத்துச் செல்ல வேண்டும் மற்றும் மாணாக்கர்கள், பேருந்து ஊழியர்கள் முகக் கவசம் அணியாமல் பேருந்தில் பயணம் செய்ய கூடாது. பேருந்து ஊழியர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டிருக்க வேண்டும். பேருந்துகள் முழுமையான பராமரிப்பில் இருக்க வேண்டும். என்ற சட்ட விதிமுறைகளை இன்றைய தினம் விழிப்புணர்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# ஆண்டிபட்டியில் அருள்மிகு காமாட்சி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் மற்றும் செல்வ விநாயகர் கோவில் நூதன ஆலய மகா கும்பாபிஷேகம்

ஆண்டிபட்டி, செப். 09 2021: தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா மறவபட்டி கிராமம் காமாட்சியம்மன் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும் செல்வ விநாயகர் கோவில் நூதன ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. விழாவை முன்னிட்டு கடந்த இரண்டு நாட்களாக நான்கு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. அதனை முன்னிட்டு விக்னேஸ்வரா பூஜை, ஆராதனம், புண்ணிய வாசனம், கோமாதா பூஜை, , வேதிகா ஆராதனம் ,பரிவார தேவதைகள் மற்றும் நவக்கிரக ஹோமம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்று ,மஹா பூர்ணாகுதி நிகழ்ச்சி நடந்தது. இதனையடுத்து நேற்று யாத்ரா தானம் தொடர்ந்து கடங்கல் புறப்பாடாகி, ஒன்பது மணிக்கு மேல் ராஜகோபுரம் மற்றும் மூல கோபுர கலசங்களுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது . பல்வேறு புண்ணிய ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் விமானங்களில் ஊற்றப்பட்டு,

பக்தர்கள் மேல் தெளிக்கப்பட்டது. அந்த நேரம் கருடன் கோவிலை வலம் வந்ததால் பக்தர்கள் பக்தி பரவசம் அடைந்தனர். இதனைத் தொடர்ந்து மூலஸ்தானத்தில் சிறப்பு வழிபாடுகளும், மகா தீபாராதனையும் காட்டப்பட்டது. அதனையடுத்து எஜமானர் மரியாதை செய்யப்பட்டு. ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை நிர்வாகக் குழுவினர் மற்றும் காமாட்சியம்மன் பங்காளிகள் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# மதுரை, மாணவ, மாணவிகளின் திறன் மேம்பாட்டிற்காக ஹெச்.சி.எல்.நிறுவனம் சார்பில் கணினிகளை பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஆணையாளர் மரு.கா.ப.கார்த்திகேயன், வழங்கினார்

மதுரை, செப்டம்பர் 09 2021: மதுரை, மாணவ, மாணவிகளின் திறன் மேம்பாட்டிற்காக ஹெச்.சி.எல். நிறுவனம் சார்பில் கணினிகளை பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஆணையாளர் மரு.கா.ப.கார்த்திகேயன், வழங்கினார்.



தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக பள்ளிகள் திறக்கப்படாமல் ஆன்லைன் மூலம் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இந்த சூழ்நிலையில் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளின் படிப்பு திறனை வளர்ப்பதற்கும், ஆன்லைன் மூலம் கல்வி கற்பதற்கும், தொழில் திறனை மேம்படுத்துவதற்கும், மாணவர்களுக்கு அறிவியல் சார்ந்த சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கும், பள்ளிகளில் தொழில்நுட்ப கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக ஹெச்.சி.எல். நிறுவனத்தின் சார்பில் மாநகராட்சியின் 14 மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவ,

மாணவிகள் பயன்பெறும் வகையில் 92 கணினிகளை ஹெச்.சி.எல். நிறுவனத்தின் செயல் இயக்குனர் அவர்கள் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் இன்று வழங்கி பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஹெச்.சி.எல் நிறுவனத்தின் செயல் இயக்குனர் திருமுருகன், துணை பொது மேலாளர் பிரகாஷ்ராமன், மேலாளர் பிரிஜோ, உதவி மேலாளர் சாமுவேல் எபினேசர், திட்ட அலுவலர் திரு.பிரபாகர்,

அமெரிக்கன் இந்தியன் பவுண்டேசன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஷர்மிளா, தலைமை ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் நிறுவனத்தின் புதிய 2 சக்கர வாகன கடன் வசதி 'எக்ஸ்பிரஸ் 2 வீலர் லோன்' அறிமுகம்!

சென்னை, செப்டம்பர் 09 2021: ஸ்ரீராம் குழுமத்தின் அங்கமான ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் நாட்டின் மிகப்பெரிய 2 சக்கர வாகன கடன் (அளிக்கப்பட்ட கடன் எண்ணிக்கையின் அடிப்படையில்) வழங்கும் நிறுவனமாக உள்ளது. இந்நிறுவனம் செயற்கை நுண்ணறிவு (கிமி) தொழில்நுட்பத்தில் இயங்க கூடிய இயங்கு தளம் மூலமாக எக்ஸ்பிரஸ் 2 வீலர் லோன் (இ2எல்) என்ற விரைவான கடன் வழங்கும் வசதியை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த தளம் இரண்டு சக்கர வாகனத்தின் ஆன் ரோடு விலையில் 100 சதவீதம் வரை உடனடியாக கடன் ஒப்புதல் அளிக்கிறது.

வாடிக்கையாளர்கள் முழுமையாக டிஜிட்டல் முறையில் ஆவணங்கள் எதுவும் இன்றி 24 மணி நேரமும், எந்த நாட்களிலும் சில மணித்துளி நேரத்தில், ஸ்ரீராம் சிட்டியின் கிளைகளுக்கு நேரடியாக சென்று எந்த ஆவணமும் சமர்பிக்காமல் எளிதில் கடன் பெறும் வசதியை இந்த தளம் வழங்குகிறது.

இந்த திட்டத்தின் தொடக்க விழாவில் பேசிய ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும், தலைமை செயல் அதிகாரியுமான ஒய்.எஸ். சக்கரவர்த்தி கூறுகையில், ''இந்தியாவின் வளர்ந்து வரும் டிஜிட்டல் கடன் சந்தை வரும் 2024-ம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் மதிப்பை எட்டவுள்ளது. அதில் இரு சக்கர வாகன கடன் வழங்குவதில் முன்னணியில் இருக்கும் ஸ்ரீராம் நிறுவனம், இந்த புதிய திட்டத்தின் வாயிலாக தனது சந்தை பங்களிப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்தில் உள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் வீட்டில் இருந்து கொண்ட தங்களது நிதி தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வசதியை இது அளிக்கிறது. இந்த வலைத்தளமானது இணையம் மற்றும் செயலி மூலமாக ஆவணங்கள் இல்லாமல், டிஜிட்டல் முறையில் உடனடியாக இரு சக்கர வாகன கடன் பெறும் வசதியை ஸ்ரீராம் வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் அல்லாதவர்களுக்கு என அனைவருக்கும் அளிக்கிறது. ஸ்ரீராம் குழுமத்தின் புதிய முயற்சிகள் அனைத்துக்கும் தொழில்நுட்பங்களே முதுகெலும்பாக உள்ளன. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை அளிக்கும் முயற்சியில் ஸ்ரீராம் குழுமம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.'' என்றார்.

# ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி பெரியபட்டணம் கிராமத்தில் பண்ணைக்குட்டையில் மீன் வளர்த்தல் குறித்த பயிற்சி

ராமேசுவரம், செப்.09 2021: மண்டபம் அடுத்துள்ள பெரியபட்டணம் பகுதியில் பண்ணைக்குட்டை அமைத்து மீன்வளர்ப்பு குறித்து பயிற்சி நடைபெற்றது.



ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் பெரியபட்டணம் கிராமத்தில் பண்ணைக்குட்டையில் மீன் வளர்த்தல் தொடர்பான பயிற்சி செயல் விளக்கம் நடைபெற்றது. இதில்,வேளாண்மை துணை இயக்குநர் கண்ணையா தலைமை வகித்தார். மீன்வளத்துறை உதவி இயக்குநர் கோபிநாத் கலந்துகொண்டு மீன்வளர்ப்பு பயிற்சி குறித்து விளக்கி பேசினார். பண்ணைக்குட்டையில் கட்லா ரோகு, மிர்கால் வகை மீன் குஞ்சுகளை பண்னைகுட்டையில் விடுவித்தார். பண்ணைக்குட்டையில் மீன் வளர்த்தல் 40 மீட்டர் நீளம் 20 மீட்டர் அகலத்தில் பண்னைக்குட்டை வெட்டலாம் 1000 முதல் 1500 வரை மீன் குஞ்சுகளை பண்ணைக்குட்டையில் விட்டு வளர்க்கலாம் என தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குநர் அமர்லால், வேளாண்மை அலுவலர் சீதாலட்சுமி, மீன்வளத்துறை ஆய்வாளர் சாகுல்ஹமீது, வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி, உதவி தொழில்நுட்ப மேலாளர் மாரீஸ்வரன், மற்றும் பெரியபட்டணம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

திருப்புல்லாணி அடுத்துள்ள பெரியபட்டணம் கிராமத்தில் பண்ணைகுட்டை அமைத்து மீன்வளர்ப்பு குறித்து பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

# மேல்மலையனூர் அங்காளம்மன் ஊஞ்சல் உற்சவம் பக்தர்களின்றி எளிமையாக நடைபெற்றது

விழுப்புரம், செப்டம்பர் 09 2021: விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயம் பிரசித்தி பெற்ற அம்மன் திருத்தலமாகும்.



இத்திருத்தலத்திற்கு தமிழகம் மட்டுமின்றி பல்வேறு வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் அம்மனை தரிசிக்க மேல்மலையனூர் வருவது வழக்கம்.

தமிழக அரசு கொரோனா நோய்கள் பரவல் காரணமாக சாமி தரிசனத்திற்கு வெள்ளி சனி ஞாயிறு திங்கள் என நான்கு நாட்கள் இவ்வாரம் சாமி தரிசனத்திற்கு தடை விதித்திருந்த நிலையில் .திங்கள் முதல் வியாழன் வரை சாமி தரிசனத்திற்கு பக்தர்களுக்கு கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை கடைபிடித்து அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று ஆவணி மாத அமாவாசை என்பதால் அதிகாலையில் மூலவர் அம்மனுக்கு பால், பண்ணீர், தயீர், இளநீர், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட அபிஷேக பொருட்களை கொண்டு அபிஷேகம் நடத்தப்பட்டது.

பின்பு மாலையில் உற்சவர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமாக தாய் மூகாம்பிகை அலங்காரத்தில் ஊஞ்சலில் அமர்ந்து அம்மன் சிறப்பு காட்சியளித்தார்.

திருகோயில் உட்பிரகாரத்தில் பக்தர்கள் யாரும் இன்றி எளிய முறையில் கோயில் பூசாரிகள் அம்மனை ஊஞ்சலில் அமர வைத்து தாலாட்டு பாடல்களை பாடி வழிபட்டனர்.

ஊஞ்சல் உற்சவத்தில் திருக்கோயில் உதவி ஆணையர் ராமு அறங்காவலர் குழுத்தலைவர் வடிவேலு பூசாரி அறங்காவலர்கள் செந்தில் பூசாரி, தேவராஜ் பூசாரி, ராமலிங்கம் பூசாரி, செல்வம் பூசாரி,சரவணன் பூசாரி மற்றும் சந்தானம் பூசாரி, திருக்கோயில் பணியாளர்கள் மணி சதீஷ் மற்றும் ஆறாம் முறை பூசாரிகள் ஊஞ்சல் உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் உணவு வழங்கும் விழா

ஒட்டன்சத்திரம், செப்டம்பர் 09 2021: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் அருகில் ஒட்டன்சத்திரம் டாக்டர். இராதாகிருஷ்ணன் , வ.உ.சி. சிதம்பரனார் குழு சார்பில் 20-ம் ஆண்டை முன்னிட்டு டாக்டர் இராதாகிருஷ்ணன் மற்றும் சுதந்திரபோராட்ட தியாகி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ஆகியோர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி , கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு சுமார் 1000 பேருக்கு இலவச நோட்டு, பேனா, சாமண்ரி பாக்ஸ், நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் உணவு வழங்கும் விழா நடைபெற்றது.



விழாவிற்கு வ.உ.சி பேரவை மாவட்ட இளைஞர் அணி செயலாளரும், வாணிய நுகர்வோர் முற்போக்கு இயக்க நிறுவனத்தலைவரும் , சமூக ஆர்வலருமான , தும்மிச்சம்பட்டி புதூர் ஆர்.சந்திரசேகரன் தலைமை வகித்து, பேசினார்.

இவ்விழாவில் தலைமை ஆசிரியர் முருகன், இடைநிலை ஆசிரியர் சாந்தி, உதவி ஆசிரியர் ஆர்.தளசேகர், தலைமை ஆசிரியர் ஈஸ்வரமூர்த்தி, தும்மிச்சம்பட்டி ரமேஷ் , பகவான் கோயில் தலைவர் வி.செல்வராஜ், தளபதி பாதை சட்டமன்ற தொகுதி நிருபர் கௌசல்யாதேவி , காந்திநகர் ராமன், எஸ்.டி.கூரியர்ஸ் பக்கிரிசாமிராஜா, பழனி ஐவகர் கன்சக்சஸ் அரசு ஒப்பந்தகாரர் ஜெ.மனோகரன், தலைமை காவலர் ரமேஷ், போக்குவரத்து காவல் தலைமை காவலர் சூர்யா, உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக டாக்டர்.இராதாகிருஷ்ணன் மற்றும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி ஆகியோர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

# தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை வைகை அணை ரோட்டில் அமைந்துள்ள புன்னகை சில்க்ஸ் 2-ம் ஆண்டு திறப்பு விழா

தேனி, செப்டம்பர் 09 2021: தேனி மாவட்டம், பெரியகுளம் தென்கரை வைகை அணை ரோட்டில் அமைந்துள்ள புன்னகை சில்க்ஸ் 2-ம் ஆண்டு திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பி.பாலுசாமி, ஏசி.சிவபாலு, வெங்கடேஷ் கோனார், அன்புக்கரசன், நல்நூலகர் சவுடமுத்து ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஊக்குவித்தனர். முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கப்பட்டது. நிர்வாக இயக்குனர்கள் முகமது இப்ரான், ஜே முகமது அராஃபத் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கினர். இக்கடையில் பணிபுரியும் ஆண், பெண் அனைத்து ஊழியர்களுக்கும் மேலாளர்களுக்கும் ஷீல்டு வழங்கி நினைவு பொருள் வழங்கப்பட்டது. முன்னாள் தம்பீஸ் உரிமையாளர் அனைவரையும் வரவேற்று அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை



புன்னகை சில்க்ஸ் உரிமையாளர்கள் மிக சிறப்பாகவும் செய்திருந்தனர். இவ்விழா நிகழ்ச்சி தொகுப்பினை அனைவரும் பாராட்டும்படி ஆர். லாவண்யா தொகுத்து வழங்கினார். இவரது பேச்சு அனைவரையும் உற்சாகப்படுத்தியது. கடையில் பணிபுரியும் அனைவர்க்கும் (வ உ சி பற்றி சிறுவன் பேச்சு அனைவரையும் உற்சாகப்படுத்தியது. அச்சிறுவனுக்கு புன்னகை சில்க்சின் நிறுவனர் சார்பாக ரொக்க பரிசு வழங்கப்பட்டது) நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவர்க்கும் உணவு வழங்கப்பட்டது .முகக்கவசம், கிருமி நாசினி, சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட்டது.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Thursday, September 09, 2021 | Rs.2/- | ISSUE - 57

# Tribal Affairs Minister Arjun Munda initiates Poshan Maah activities in Khunti district, Jharkhand

New Delhi, September 09 2021: Arjun Munda, Tribal Affairs Minister initiated Poshan Maah activities of Tribal Affairs Ministry this week with a programme organised in Khunti district, Jharkhand including a pledge with message of "Sahi Poshan Desh Roshan".

The health of tribal women is an important aspect of Poshan Maah and to bring focus to the nutrition of tribal women, Tribal Affairs Minister Sh. Arjun Munda met beneficiaries of Pradhan Mantri Matru Vandana Yojana and highlighted benefits of nutrition for pregnant and lactating mothers.

A nutrition counseling camp and nutrition seminar were organized in Jheelara village, a tribal dominated area of Kauakol block of Nawada district,Bihar this week in which all panchayat members participated. Around 200 people attended this camp in the village located in Santhal tribal dominated area.

The children were weighed in advance by the volunteers and special counselling sessions were organised for mothers of mal-nourished children. Simultaneously, the applications of pregnant women was filled under the Pradhan Mantri Matru Vandana Yojana and applications also filled up under Kanya Utthan Yojana.

Nutritious cereals which are available at the regional level were also displayed at the camp.

Nutrition kits and sanitization kits were distributed to pregnant women. Mothers were told about the quality of 5 types of cereals which are available regionally.



Poshan Maah activities were also organized in Munda and Aggra Munda tribal dominated areas of Jharkhand. The locals were distributed fruits, vegetables , cereals and given the message of a healthy living with a nutritious diet.

Fourth Poshan Maah as a sequel of previous Poshan Abhiyaan which started in 2018 is being celebrated in the month of September with Ministry of Women and Child Development as the nodal ministry.

Given the importance of nutrition in mitigating anaemia, chronic nutrition deprivation in children which affects their survival, growth, learning, performance in school, productivity among Scheduled Tribes, Ministry of tribal affairs has planned to organise several activities and programmes at centre, state and local level.



**Chennai: Minister of State for Information & Broadcasting and Fisheries, Animal Husbandry & Dairying Dr L Murugan met with Minister of Railways Ashwini Vaishnav.**

# Education is an important tool for national character building – Annapurna Devi

New Delhi, September 09 2021: Prime Minister Shri Narendra Modi addressed the inaugural conclave of Shikshak Parv on 7 September, 2021 via video conferencing. The inaugural conclave was followed by a technical session on the current year's theme: "Quality and Sustainable Schools: Learnings from Schools in India". Smt. Annapurna Devi, Minister of State for Education was the chief guest on the occasion. The session was chaired by Dr. K. Kasturirangan, Chairman, National Education Policy Committee. Prof. J.S. Rajput Former Director, NCERT and senior officials of the Ministry were present on the occasion.

Speaking on the occasion Smt Annapurna Devi stated that the development of a nation is dependent on education as education is an important tool for national character building. Therefore capacity building of children is essential. She stressed that it is important that both teachers ad children learn together, they must also learn the local skills and acquire experience based learning to make education more relevant in present times. She also mentioned that quality and sustainability are two sides of the same coin. Smt Annapurna Devi hoped that the discussions and ideas that emerge out of this conclave will help in realising the vision of our Prime Minister of strengthening the education system of our country.

Kasturiangan appreciated the efforts of the Ministry of Education in organising this important conclave with the Prime Minister setting the tone of the deliberations for the forthcoming sessions and also lauded the initiatives that have been taken to realised the vision of NEP 2020. He also appreciated the efforts taken by Sh. Dharmendra Pradhan, Minister of Education for the steps taken by him to realise the goals of NEP in such a short span of time. He pointed out that owing to the outbreak of Covid 19 there were some disruptions as well as learning loss among children and hopes that many of these issues and challenges will be addressed during the conclave. He emphasised on focusing on four issues in this regard: Firstly, the Foundational Literacy and Numeracy is an important aspect mentioned in NEP 2020. Secondly, community engagement and support is also required to ensure that all children are retained in school. The thirds point is curricular transformation with regard to which the NEP focuses on lessening the burden so that there is more scope for other forms of learning. The fourth issue relates to the teachers who are central to the education system and have an important role to play in bridging the gap of learning loss. Thus restoring quality education and maintaining sustainability are the two major challenges, beside the challenges posed by the pandemic.

Prof. J.S. Rajput said there is a need to restore respect for teachers. He further said that, teachers must also remember that they must first know the child, understand the mind of the child and remember that nothing can be taught but learnt. Learning is the treasure within, teachers can only inspire the learners to realise the treasure from within, he added.

Prof. Rajput highlighted that there is a social responsibility of parents, principals, teachers and community to feel a sense of belonging towards the school. The pandemic has given us a chance to improve the environment of government schools in terms of access, security and quality of teaching, teacher student ratio, etc., he added. He concluded by saying that three things are very important to re- establish the glory of rich educational heritage of India in the world: Lifelong Learning, Learning to Learn and Learning to Live Together.

Anita Karwal thanked Annapurna Devi, Dr. K. Kasturirangan, Prof. J.S. Rajput and all the speakers. She stated some of the initiatives taken by teachers are eye openers such as starting entrepreneurship for grade I, exposure of nature these are excellent examples of connecting learning to real life. There is need to build capacity of school, society and of parents to participate hand in hand to bring sustainability, she added.

# Rotaract Club of VISTAS donated desktops to Sarada Vidyalaya Model Girls' School, T Nagar







**Chennai, September, 09 2021: The Rotaract Club of VISTAS sponsored by Rotary club of Chennai golden star along with rotary club of madras south , Rotary international district 3232 , conducted a community service event "Vision through Machine" in association with Ford Rotary Initiative on the 7th of September 2021 at Sarada Vidyalaya Model Girls' School, T Nagar between 11:00AM-12:30 Pm .The Purpose of the event was to donate desktops to the school which should be helpful for their education. The dignitaries for the event were as follows: Rtr.R.Aadhith President Rotaract club of Vistas, Rtn. Gopala Krishnan District Youth service director, Rtn/Rtr. M. Sesha Sai District Rotaract Committee Chairman, Rtn. Mukund Vedapudi District Associate youth service director Guest of honour Rtn. Semmalar President Rotary club of Chennai Golden Star Rtn. John Vincent Secretary Rotary club of Chennai Golden Star Rtn. Navamani Youth service Director Rotary club of Chennai Golden Star Special invitees Rtr.P.P. Kamuvel District Rotaract Representative Rtr. P.P Dinesh kumar District Community Service Director.**

# Genelia Deshmukh shares her family's secret remedy for cough and cold during monsoons

Chennai, September 09 2021: Monsoon for many is a shower of relief from the constant heat, the pleasant atmosphere or the splash of puddles loved by all. From little kids to the older ones, everyone has their own monsoon fun activity planned. Despite all the fun things that monsoon brings, we also see a lot of cold and cough symptoms coming up during this season. This means one needs to be extra cautious and mindful about their respiratory health and wellness with a simple regime that's easy to practice at home.

Talented actress and hands-on mom Genelia Deshmukh is known to balance fun and health and keeps giving a peek into the Deshmukh family's health regime on various occasions. With the monsoon here in full-force, Genelia relies on simple home remedies to ensure her family is protected and on their ace health while enjoying the monsoon family fun at home. She ensures that her family starts their day with Yoga and deep breathing exercises, followed by healthy eating consisting of seasonal fruits and vegetables high in essential vitamins to enhance immunity.

Sharing more about her monsoon health regime, Genelia says "Outdoor activities are always a favorite in our family, more so during monsoons. However, monsoons are also tough to handle with little kids at home and us constantly traveling for work. Therefore, I ensure that my family follows a healthy routine during this time with yoga, eating healthy meals and in case of cough & cold symptoms, steam inhalation with Vicks VapoRub to get relief from it."



She further added, "Being ardent believers of the goodness in traditional home remedies, this is the one thing I always carry with me and this practice has stuck through generations in our house. We start off by adding a teaspoon of Vicks VapoRub into a bowl of hot water, not boiling, covering our head with the towel, and inhaling the vapors, followed by a good rest. With natural ingredients like eucalyptus, camphor and Menthol, Vicks Vapo Rub gives relief from symptoms of cough & cold and remains something I trust personally."

# Shriram City Union Finance Launches Express Two-Wheeler Loans

Chennai, September 09, 2021: Shriram City Union Finance Ltd. (Shriram City), India's largest two-wheeler financer (number of 2W financed) and part of the Shriram Group, has launched an AI-enabled lending platform - Express Two-wheeler Loans (E2L). The platform will allow instant loan approval of up to 100 percent on-road price of the two-wheelers.

Customers can avail a fully digital and paperless two-wheeler loan facility round the clock in just a few minutes, without visiting a branch and submitting physical documents.

Speaking at the launch YS Chakravarti, MD & CEO, Shriram City Union Finance said, "India's growing digital loan market is set to touch $1 trillion by 2024, and Shriram City being a leader in two-wheeler financing aims to further expand its market share through the newly launched E2L facility. This will enable customers to meet their financial requirements from the comfort of their homes. The platform will allow both existing and non-Shriram City customers to avail instant two-wheeler loans through our App or website in a completely paperless and digital manner. Technology is the backbone of all innovation at Shriram Group, and we are constantly working towards providing a superior customer experience."

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction